*3*

# இயேசு, தூதர்கள் மற்றும் நாம்

## (1:4-14)

*இயேசு "தூதர்களைக் காட்டிலும் மேலானவராக இருக்கிறார்" என்று கூறுகிற எபிரெயர் 1:4 வசனத்தை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். இந்த அதிகாரத்தின் எஞ்சிய பகுதியானது, இயேசுவையும் தூதர்களையும் ஒப்பிடுகிறது மற்றும் இவ்வசனப் பகுதி நமக்குச் செய்தியொன்றைக் கொண்டுள்ளது.*

### தூதர்கள்

*மக்கள் நீண்ட காலமாக, தூதர்களைக் குறித்து மன ஈர்ப்புக் கொண்டுள்ளனர்: அவர்கள் யார்? அவர்கள் என்ன செய்கின்றனர்? மற்றும் பிற கேள்விகள். எபிரெயருக்கு எழுதிய நிருபம் தூதர்களைப் பற்றிப் பல முறைகள் குறிப்பிடுகிறது. நமது வசனப் பகுதியில் உள்ள குறிப்புகளுடன் கூடுதலாக, தூதர்கள் பற்றிய தலைப்பு மீண்டும் 2ம் அதிகாரத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறது (வசனங்கள் 2, 5, 7, 9, 16). இப்புத்தகத்தின் கடைசிப் பகுதியில்கூட தூதர்களைப் பற்றிய இரண்டு மறைமுகமான குறிப்புகள் உள்ளன (12:22; 13:2).*

*தூதர்களைப் பற்றி இந்தப் புத்தகம் கூறும் மேலும் ஒரு ஆர்வத்திற்குரிய விஷயம் 1:14ல் உள்ளது: "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?" தூதர்கள் கிறிஸ்தவர்களுக்கு எவ்வாறு ஊழியம் செய்கின்றனர் என்று மிகச்சரியாக நமக்குக் கூறப்படுவதில்லை. ஏதோ ஒருவகையில் அவர்கள், தேவனுடைய பிள்ளைகளுக்கு அவரது பராமரிப்பில் ஈடுபடுகின்றனர்.*

### இயேசுவும் தூதர்களும்

தூதர்கள் பற்றிய தலைப்பு மனதை ஈர்க்கக் கூடியதாக இருக்கையில், தூதர்கள் இயேசுவுடன் ஒப்பிடப்பட இயலாதவர்களாக உள்ளனர்; இதுவே நமது வசனப்பகுதியின் கருத்தாக உள்ளது. கிறிஸ்து தூதர்களைக் காட்டிலும் மேலானவராக இருக்கிறார் என்பதை நீருபிக்க எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் ஒரு தனி விவாதத்தை முன்வைக்கிறார்: அவர் அவ்வாறு இருக்கிறார் என்று *வேதவசனங்கள்* கூறுகின்றன. 1:4-14ல் பழைய ஏற்பாட்டில் இருந்து ஏழு மேற்கோள்கள் தரப்படுகின்றன, இவைகள் முதன்மையாக சங்கீதங்களின் புத்தகத்தில் இருந்து வருகின்றன. தூதர்கள் *ஊழியக்காரர்களாக* இருக்கையில் இயேசு *குமாரனாக இருக்கிறார்* என்பதால், அவர் தூதர்களைக் காட்டிலும் மேலானவராக இருக்கிறார் என்ற ஒரு சிந்தனை இந்த மேற்கோள்களினூடே ஓடுகிறது. எழுத்தாளரின் சிந்தனை வரியைக் கவனியுங்கள்:

*(1) இயேசு, தேவனுடைய குமாரன் என்று பெயர்பெற்றுள்ளதால் அவர்*

தூதர்களைவிட மேலானவராக இருக்கிறார் மற்றும் தூதர்கள் அவ்வாறு இல்லை (வசனங்கள் 4, 5). இங்கு முதலில் சங்கீதம் 2:7ம் பின்பு 2 சாமுவேல் 7:14ம் மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டுமே தாவீதின் வம்சவழி பற்றிக் கூறுகின்றன. இவைகள் கிறிஸ்துவுக்குள் நிறைவான மற்றும் முழுமையான நிறைவேற்றத்தைக் காணுகின்றன.

(2) *இயேசுவைத் தூதர்கள் தொழுதுகொள்ள வேண்டும்* என்பதால் (தாழ்ந்தவர்கள் உயர்ந்தவர்களைத் தொழுதுகொள்கின்றனர்), அவர் தூதர்களைவிட மேலானவராக இருக்கிறார். 6ம் வசனத்தில் உள்ள மேற்கோள், செப்துவஜிந்த் வேதாகமத்தில் உபாகமம் 32:43ல் இருந்து வந்துள்ளது. உபாகமத்தின் சந்தர்ப்பப்பொருள் தேவனைக் குறிப்பிடுகிறது, ஆனால் எழுத்தாளர், "அவருடைய (தேவனுடைய) தன்மையின் சொரூபமுமாயிருக்கிற" (எபிரெயர் 1:3) இயேசுவுக்கு இவ்வசனப் பகுதியை நடைமுறைப்படுத்துவதற்குத் தயங்கவில்லை.

(3) *தூதர்கள் எவ்வளவு மேலானவர்களாக இருந்தாலும், அவர்களின் மாபெரும் தன்மை, என்றென்றைக்கும் எல்லார் மீதும் ஆளுகை செய்கிற குமாரனின் மேன்மையுடன் ஒப்பிடப்பட முடியாது* என்பதால் அவர் தூதர்களை விட மேலானவராக இருக்கிறார் (வசனங்கள் 7-9). தூதர்களைப் பற்றிய இவ்வசனப்பகுதி (வசனம் 7), சங்கீதம் 104:4ன் செப்துவஜிந்த் வேதாகமத் தரவழைப்பில் இருந்து வந்துள்ளது. குமாரனைப் பற்றிய வசனப்பகுதி (வசனங்கள் 8, 9), இயேசுவில் நிறைவான மற்றும் முழுமையான நிறைவேற்றத்தைக் கண்டறிகிற "இராஜரீக சங்கீதத்தில்" (சங்கீதம் 45:6, 7) இருந்து வந்துள்ளது.

(4) இயேசு எல்லாவற்றையும் படைத்த *நித்திய சிருஷ்டிகராக இருப்பதால்* (வசனங்கள் 10-12), அவர் தூதர்களைக் காட்டிலும் மேலானவராக இருக்கிறார்; இதற்கு நேர்மாறாக (மறைமுகமாக உணர்த்துதலினால்) தூதர்கள் சிருஷ்டிகர்களாக அல்ல ஆனால் சிருஷ்டிக்கப் பட்டவர்களாக இருக்கின்றனர். தேவனைப் பற்றிப் பேசப்பட்ட சங்கீதம் 102:25-27தான் இங்கு குறிப்பிடப்படுவதாக உள்ளது, ஆனால் எழுத்தாளர் இதை, தேவன் உலகத்தை உண்டாக்குவதன் மூலமாகத் தேர்ந்து கொண்ட இயேசுவுக்கு நடைமுறைப்படுத்தினார் (எபிரெயர் 1:2).

(5) *தூதர்கள் பணிவிடை ஆவிகளாக இருக்கையில், இயேசு ஆளுகை செய்கிறார் என்ற காரணத்தினால்* அவர் தூதர்களைக் காட்டிலும் மேலானவராக இருக்கிறார் (வசனங்கள் 13, 14). இயேசு அரியணையில் வீற்றிருக்கிறார் என்பதை நிரூபிக்க சங்கீதம் 110:1 மேற்கோள் காண்பிக்கப்படுகிறது, அதே வேளையில் தூதர்கள் ஊழியக்காரர்களாக (பணிவிடை ஆவிகளாக) இருக்கின்றனர் என்ற உண்மை புரிந்துகொள்ளப்படுவதற்கு ஆழ்ந்து சிந்திக்கப்படுகிறது என்பது உறுதி. (தூதர்களைக் காட்டிலும் கிறிஸ்துவின் மேன்மை பற்றிய கலந்துரையாடல், 2:1-4ன் புத்திமதிக்குப் பின்பு 2:5ல் தொடர்ந்தது.)

## இயேசு, தூதர்கள் மற்றும் நாம்

தூதர்களைக் காட்டிலும் இயேசு மேலானவர் என்ற கருத்தை எழுத்தாளர் தமது முதல் கருத்தாக்கியது ஏன்? மற்றும் இது நம்மிடத்தில் செய்ய வேண்டியிருப்பது என்ன? 2:1-4ல் எழுத்தாளர், இயேசு தூகர்களைக் காட்டிலும் மேலானவர் என்ற உண்மையின் நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தினார்

*(விசேஷமாக 2 மற்றும் 3 வசனங்களைக் கவனிக்கவும்), ஆனால் இந்த வேளையில் கூடுதலான சில சிந்தனைகள் முறையானவையாக உள்ளன.*

*யூதர்கள் தூதர்களைப் பற்றி மன ஈர்ப்புக் கொண்டவர்களாக இருந்தனர் மற்றும் தூதர்களின் படிநிலை அமைப்பு எவ்வாறு இருக்கும் என்பதன்மீது யூகங்கள் செய்திருந்தனர். தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் சிலரும் தூதர்கள் பற்றிய தலைப்பினால் மதிமயங்கி இருந்தனர். சிலர் தூதர்களைத் தொழுதுகொள்ளவும் செய்தனர் என்பது தெளிவு (கொலோசெயர் 2:18; காண்க வெளிப்படுத்தின விசேஷம் 19:10; 22:8, 9). தூதர்களைக் காட்டிலும் கிறிஸ்து மேலானவராக இருந்தார் என்பதை எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் முதன்முதலாகக் குறிப்பிட்டார் என்ற உண்மையானது, 1ம் அதிகாரத்தின் முதல் வசனத்துடன் பிணைபட்டிருக்கலாம்: "பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்." தூதர்கள் மூலமாகச் செய்தியை அளித்தல் என்பது அந்த வழிகளில் ஒன்றாக இருந்தது. அடுத்த அதிகாரத்தின் 2ம் வசனம் தூதர்களை பழைய ஏற்பாட்டின் வெளிப்படுத்துதலுடன் பிணைக்கிறது. இயேசு தூதர்களைக் காட்டிலும் மேலானவராக இருக்கிறார் என்றால், அவர் வெளிப்படுத்தியுள்ள செய்தி (1:2) அவர்கள் வெளிப்படுத்தின செய்தியைக் காட்டிலும் மேலானதாக இருக்கிறது.*

*இயேசுவின் புதிய உடன்படிக்கையானது பழைய உடன்படிக்கையைக் காட்டிலும் மேலானதாக உள்ளது (இதுவே எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் திறவுகோல் ஆய்வுக்கருத்தாகும்) என்ற உண்மையைத் தவிர, நாம் கேள்விப்படச் செய்தி வேறு எதாவது ஒன்று உள்ளதா? இன்றைய நாட்களில் மக்கள் இன்னமும் தூதர்களைப் பற்றிய மன ஈர்ப்புக் கொண்டுள்ளனர். உண்மையில் பலர், விசித்திரமான, வினோதமான அல்லது மாறுபட்ட எந்த விஷயத்தினாலும் மதிமயக்கப் பட்டுள்ளனர். எவரொருவரும் எந்த ஒரு விஷயமும் இயேசுவை விட்டு நமது கண்களைப் பிரிக்க நாம் ஒருக்காலும் அனுமதிக்கக் கூடாது என்பதே நமது வசனப்பகுதியில் இருந்து வருகிற ஒரு முடிவாக உள்ளது. நாம் கனப்படுத்த வேண்டிய, மதிக்க வேண்டிய மற்றும் கீழ்ப்படிய வேண்டிய ஒருவராக* அவர் *இருக்கிறார்!* அவரே *ஆறுதல் மற்றும் ஊக்கமூட்டுதல் ஆகியவற்றிற்கு ஆதாரமூலமாக இருக்கிறார்!*